பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kālaikkathir — மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2052 தை 20 திங்கட்கிழமை 01.02.2021 கதிர் 319

## மேல் மாகாணத்தின் 1031 பாடசாலைகள் 15 முதல் ஆரம்பம்

மேல் மாகாணத்தின் கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களில் உள்ள 1031 பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் மீள ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளன என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

2

# போர்க்குற்றங்களுக்கு நீதி வேண்டி ஐ.நாவின் போராட்டம் உச்சக்கட்டம்!

## ருவிட்டரிலும் வீடியோ ஆதாரங்களுடன் கடும் தாக்கு – சீறுகின்றது கோட்டா அரசு

**ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் இலங்கைக்கு எதிராக ருவிட்டரில் போராட்டம் மேற்கொண்டு வருகின்றார் என்று வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன குற்றஞ்சாட்டியுள்ளார்.**

**ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் மேற்கொண்டு வரும் ருவிட்டர் போராட்டத்தில் போர்க்காலக் காட்சிகள் உள்ளடங்கிய வீடியோக்களும் உள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.**

**இலங்கை கடந்த கால மனித உரிமை மீறல்களைக் கவனிக்கத் தவறியதால், மீண்டும் மனித உரிமை மீறல்கள் நிகழும் அபாயம் அதிகரித்துள்ளது எனக் குறிப்பிடும் ருவிட்டர் பதிவொன்றை ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகம், போர்க்கால வீடியோவுடன் வெளியிட்டுள்ளது.**

2



## அமைச்சர் பந்துலவின் செயலருக்குத் தொற்று

வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தனவின் செயலாளர் பத்ரானி ஜயவர்த்தனவுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார் எனவும், அதன் முடிவுகள் இன்று வெளியாகியுள்ள நிலையிலேயே கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனவும் வர்த்தக அமைச்சு அறிவித்துள்ளது.

இன்று பகல் அவர் ஒரு மருத்துவ நிலையத்துக்கு மாற்றப்

2

# கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையம் முழுமையாக துறைமுக அதிகார சபையின் கட்டுப்பாட்டிலேயே இருக்குமாம்

## வெளிநாடுகளிடம் கையளிக்கமாட்டோம் என்று மஹிந்த உறுதி நாளை முதல் கைவிடப்படுகின்றது சட்டப்படி வேலை போராட்டம்





அரசின் தேசிய சொத்துக்களை வெளிநாடுகளுக்கு விற்கக் கூடாது என்ற கொள்கைக்கமைய கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை எந்தவொரு நாட்டிடமும் கையளிக்கமாட்டோம்.

- இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத் தொழிற்சங்கங்களிடம் உறுதியளித்தார்.

2

## ஜனவரியில் 112 மரணங்கள்; 20,858 பேருக்குக் கொரோனா

இலங்கையில் உறுதிப்படுத்தப்பட்ட ஒட்டுமொத்த கொரோனா வைரஸ் தொற்று நோயாளர் மற்றும் கொரோனா மரணங்களில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு

2

## தாயை விளையாட்டாக மிரட்ட முனைந்த இளைஞர் தீயில் எரிந்து பரிதாப மரணம்

### உரும்பிராய் கிழக்கில் சம்பவம்

வீட்டில் தாயாருடன் சண்டை பிடித்துவிட்டு தனக்குத் தானே மண்ணெண்ணெய் ஊற்றித் தாயாரை மிரட்டு மகன் செய்த விளையாட்டு விபரீதமாக மாறியுள்ளது.

உடம்பில் ஒட்டிய மண்ணெண்ணெய் காய்ந்து விட்டது என்று நினைத்து பீடியைப் புகைத்தபோது

2

### பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை

# அரசுக்கு எதிரான போராட்டத்துக்கு களுவாஞ்சிக்குடியில் தடையுத்தரவு



### சாணக்கியன் எம்.பி. கண்டன அறிக்கை

அரசின் அராஜகச் செயல்களுக்கு எதிராக - தமிழின அழிப்புக்கு எதிராக - பொத்துவில் தொடக்கம் பொலிகண்டிவரை முன்னெடுக்கப்படவுள்ள போராட்டத்துக்கு முதலாவது தடை உத்தரவு களுவாஞ்சிக்குடியில் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் சபை அமர்வின் போது, மக்களைத் தூண்டிவிட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட கட்சிகள் இந்தப் போராட்டத்தை நடத்துகின்றன என்று தெரிவித்து பொலிஸார் தாக்கல்

2

### புலமைப்பரிசில் பரீட்சை வெட்டுப்புள்ளி சர்ச்சையால்

## மாணவர்களைப் பிரபல பாடசாலைகளில் இணைக்கும் நடவடிக்கைகள் ஒத்திவைப்பு

2020ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் வெட்டுப்புள்ளிகளின் அடிப்படையில் மாணவர்களைப் பிரபல பாடசாலைகளுக்கு இணைத்துக்கொள்ளுவதற்கான நடவடிக்கைகளை ஒரு மாத காலத்துக்கு ஒத்திவைக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. இந்தத் தகவலை அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபிலா பெரேரா தெரிவித்துள்ளார்.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களைப் பிரபல பாடசாலைகளில் சேர்ப்பதற்கான வெட்டுப்புள்ளிகள் நியாயமற்ற முறையில் உயர்த்தப்பட்டுள்ளன எனக் கூறி ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையிலேயே மேற்படி அறிவித்தலை கல்வி அமைச்சு விடுத்துள்ளது.

## கருவுடன் ரிஷாத் அணி இன்று முக்கிய சந்திப்பு

### சிறுபான்மைச் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினை குறித்து கலந்துரையாடல்



சிறுபான்மைப் பிரச்சினைகள் தொடர்பில் மக்கள் காங்கிரஸ் - கருஜயசூரிய இடையில் கலந்துரையாடல் நடைபெற்றது.

நியாயமான சமூகத்துக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான

2

## தாயும் பிள்ளையும் வெட்டிக் கொலை!




அம்பாறை - தமண பிரதேசத்தில் அம்பலன் ஓயா பகுதியில் தாயும் ஆண் பிள்ளையும் வெட்டுக்காயங்களுடன் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தப் பிரதேசத்திலுள்ள

2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## அமைச்சர் பந்துலவின் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளார் எனவும், வர்த்தக அமைச்சில் உள்ள அவரது அலுவலக அறை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அவருடன் தொடர்புகளைப் பேணியமையின் காரணமாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தனவும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

அந்தச் சோதனை முடிவுகள் இன்று மாலை வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## தாயை விளையாட்டாக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்ட தீயால் உடல் முழுவதும் காயங்களுக்கு உள்ளான நபர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

உரும்பிராய் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த கோபாலசுந்தரம் கவிதாஸ் (வயது-33) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

கடந்த 28ஆம் திகதி இவர் தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இன்று மரண விசாரணை இடம்பெற்றது.

உடற்கூற்று பரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப் பட்டது.

## ஜனவரியில் 112 .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனவரி மாதத்தில் மட்டும் பதிவாகியுள்ளது எனச் சுகாதார அமைச்சின் உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

ஜனவரி மாதத்தில் மட்டும் 112 கொரோனா மரணங்கள் இலங்கையில் பதிவாகியுள்ளன. இது நாட்டில் இதுவரை பதிவான ஒட்டுமொத்த கொரோனா மரணங்களில் 35.44 வீதமாகும்.

ஜனவரி ஆரம்பத்தில் இலங்கையில் கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 204 ஆகப் பதிவாகியிருந்தது. நேற்று வரையான தரவுகளின் பிரகாரம் உயிரிழப்பு எண்ணிக்கை 316ஆக உயர்ந்துள்ளது.

நவம்பர் மாதத்தில் 98 கொரோனா மரணங்கள் பதிவான நிலையில் ஜனவரியில் இது 112 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், ஜனவரி மாதத்தில் இலங்கையில் 20 ஆயிரத்து 858 புதிய கொரோனாத் தொற்று நோயாளர்கள் உறுதிப்படுத்தப்பட்டனர். நாட்டில் இதுவரை பதிவான ஒட்டுமொத்த கொரோனா தொற்று நோயாளர்களில் இது 32.51 வீதமாகும்.

கொரோனா மரணங்கள் மற்றும் தொற்று நோயாளர் தொகை அதிகரிப்பு இலங்கையில் கொரோனா தொற்று நோய் இரண்டாவது அலையின் பாதிப்புக்கள் அதிகரித்துள்ளமையை வெளிப்படுத்துகிறது.

ஆனால், சுகாதார அதிகாரிகள் கொரோனா இன்னும் சமூகத் தொற்றாக மாற்றமடையவில்லை என மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகின்றனர்.

இலங்கையில் கொரோனாத் தடுப்பூசி போடும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப் பட்டுள்ளன. இந்த ஆண்டு இறுதிக்குள் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள விரும்பும் நாட்டு மக்களின் 65 வீதமானவர்களுக்கு தடுப்பூசிகளைப் போட முடியும் என்ற எதிர்பார்ப்பை இலங்கை கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## போர்க்குற்றங்களுக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த ருவிட்டர் செய்தி, இலங்கை விவகாரங்கள் தொடர்பாக வகுக்கப்பட்டுள்ள நடைமுறைகளில் இருந்து முழுமையான விலகலாகும் என்றும், பக்கச் சார்பானது என்றும் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

இம்முறை நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத் தொடரில் இலங்கை விவகாரம் முக்கிய இடம் வகிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மேல் மாகாணத்தின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கமைய கம்பஹா மாவட்டத்தில் உள்ள 590 பாடசாலைகளில் 589 பாடசாலைகளும், களுத்துறை மாவட்டத்தில் உள்ள 446 பாடசாலைகளில் 442 பாடசாலைகளும் கல்வி நடவடிக்கைகளுக்காக 15 ஆம் திகதி திறக்கப்படவுள்ளன.

இதேவேளை, கொழும்பு மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பாக இறுதித் தீர்மானம் இவ்வார இறுதியில் வெளியிடப்படும் எனவும் கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், மேல் மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் ஜி.சீ.ஈ. சாதாரண தர மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் கடந்த மாதம் இறுதி வாரத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

## கொழும்புத் துறைமுக ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையம் நூறு வீதம் இலங்கை துறைமுக அதிகார சபையின் கட்டுப்பாட்டிலேயே இருக்கும் என்றும் அவர் மேலும் வாக்குறுதியளித்தார்.

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தின் உரிமை மற்றும் கட்டுப்பாட்டை வெளிநாட்டுக்கு வழங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்கின்றது எனத்தெரிவித்து கிழக்கு முனையத்தைப் பாதுகாக்கும் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு எதிர்ப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

இந்தநிலையில், அலரி மாளிகையில் இன்று காலை கிழக்கு முனையத்தைப் பாதுகாக்கும் தொழிற்சங்கத்தினருக்கும் பிரதமருக்கும் இடையே கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது, உள்ளூர் வளங்களை விற்பனை செய்வதைத் தவிர்க்கும் தற்போதைய அரசின் கொள்கையின் கீழ் கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை எந்தவொரு நாட்டுக்கும் விற்பனை செய்யவோ அல்லது கட்டுப்பாடு வழங்கப்படவோ மாட்டா எனப் பிரதமர் குறிப்பிட்டார். அது 100 வீதம் துறைமுக அதிகார சபையின் கீழ் செயற்படும் நிறுவனமாகத் தொடர்ந்தும் செயற்படும் என்றும் அவர் உறுதியளித்தார்.

இதனுடன் தொடர்புடைய அமைச்சரவைப் பத்திரத்தை சம்பந்தப்பட்ட துறைக்குப் பொறுப்பான அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன இன்று பிற்பகல் அமைச்சரவையில் சமர்ப்பிப்பார் எனவும், இதனால் போராட்டங்களை நடத்த வேண்டிய அவசியம் இருக்காது எனவும் பிரதமர் மேலும் குறிப்பிட்டார்.

பிரதமரின் இந்தக் கருத்துக்களுக்கு கிழக்கு முனையத்தைப் பாதுகாக்கும் தொழிற்சங்கத்தினர் உடன்பாடு தெரிவித்தனர். அதற்கமைய சட்டப்படி வேலை செய்யும் போராட்டத்தை நாளை முதல் கைவிடுவதற்கும் அவர்கள் ஒப்புக் கொண்டனர்.

எனினும், கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையம் அந்நியர்களுக்கு வழங்கப்படமாட்டாது என்பதை உறுதியளித்து எழுத்து மூலமான ஆவணமொன்றை வழங்குமாறு இந்தக் கலந்துரையாடலின்போது தொழிற்சங்கத் தலைவர்கள் பிரதமரிடம் கோரினர்.

ஆனால், தனது 50 ஆண்டுகால அரசியல் வரலாற்றில் தொழிற்சங்கங்களால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் பலவற்றைத் தாம் தீர்த்துள்ள போதிலும், அது தொடர்பில் எழுத்து மூலமான ஆவணமொன்றை இதுவரை வழங்கியதில்லை என்றும், தாம் வாக்குறுதியளித்தால் அது அவ்வாறே நிறைவேற்றப்படும் என்றும் பிரதமர் கூறினார்.

பிரதமர் என்ற வகையில் நான் முன்னெடுக்கும் கூட்டங்களில் எடுக்கப்படும் தீர்மானங்களை அவ்வாறே செயற்படுத்துவதற்கு அரச அதிகாரிகள் கடமைப்பட்டுள்ளனர். நான் மேற்கொள்ளும் தீர்மானங்கள் கலந்துரையாடல்களுடன் மட்டுப்படாது அவை செயற்படுத்தப்படும் என்றும் மஹிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

## அரசுக்கு எதிரான ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்த அறிக்கையின் பிரகாரம், களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் போராட்டங்களை நடத்த நீதிமன்றம் தடைவிதித்துள்ளது.

அத்துடன், இதுதொடர்பான அறிவிப்புக்கள் பல்வேறு அரசியல் பிரமுகர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனுக்கும் நீதிமன்றம் தடைவிதித்துள்ளது.

இந்தத் தகவலை அவர் அறிக்கையூடாக உறுதிப்படுத்தியுள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

இன்று களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவால் எனக்கு இம்மாதம் 3 ஆம் திகதி முதல் 6 ஆம் திகதி வரையிலான போராட்டத்தில் கலந்துகொள்வதைத் தடை செய்யுமாறு களுவாஞ்சிக்கொடி பொலிஸாரால் நீதிமன்றத்தை நாடி பெற்றுக்கொள்ளப்பட்ட உத்தரவு என்னிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதில் மிகவும் வேடிக்கை என்னவென்றால், இந்த விடயம் தொடர்பாக கொரோனாவைக் காரணம் காட்டி, கொரோனா காலப்பகுதியில், சமூக இடைவெளி பேணப்பட வேண்டும், சமூக இடைவெளியைப் பேணாமல் ஆர்ப்பாட்டங்கள் செய்யப்படக் கூடாது எனச் சொல்லி நீதிமன்றத்தைப் பொலிஸார் நாடியுள்ளனர்.

ஆனால், கொழும்பில் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்குவதற்கு எதிராக ஆயிரக் கணக்கானவர்கள் கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்குப் பொலிஸாரால் தடை உத்தரவு வழங்க முடியாது. ஏனெனில் அது அரசுடன் தொடர்புடைய விடயம்.

கடந்த காலத்தில் அரசியல்வாதிகளுடைய விடுதலை குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பிள்ளையானை விடுதலை செய்தபோது நூற்றுக்கணக்கான இளைஞர்கள் இணைந்து முன்னெடுத்த வெற்றிக்கொண்டாட்டங்களுக்கு பொலிஸாரால் எந்தத் தடையும் விதிக்கப்படவில்லை.

அதற்கு முன்னரான காலப்பகுதியில், அதாவது கொரோனா ஆகக்கூடுதலாக இருந்த காலப்பகுதியில் கூட அமைச்சர்கள் பதவிப்பிரமாணம் செய்து கொண்டமையையடுத்து இலங்கையின் அனைத்துப் பிரதேசங்களிலும் நடைபெற்ற நடைபவனி நிகழ்வுகளுக்குத் தடை உத்தரவு போடாத பொலிஸாரால், ஒரு ஜனநாயக விரோதமான அரசுக்கு எதிராக நாங்கள் முன்னெடுக்கின்ற நீதிக்கான போராட்டங்களுக்கு மட்டும் தடை உத்தரவு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளமை ஒரு வேடிக்கையான விடயம்.

இது நான் எதிர்பார்த்த ஒரு விடயம் தான். எனக்குப் பதவி உயர்வுகளோ அல்லது பதவிகளோ கிடைப்பது போன்று நீதிமன்றத் தடை உத்தரவுகள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. நான் நினைக்கின்றேன் கடந்த ஓர் ஆறுமாத காலமாக 10 இற்கும் மேற்பட்ட நீதிமன்றத் தடை உத்தரவுகள் எனக்குக் கிடைத்துள்ளன. தடை உத்தரவுகள் கிடைக்கின்றமை தற்போது மதியம் உணவருந்துவது போல் ஓர் இயல்பான விடயமாக எனக்கு மாறியுள்ளது.

இதில் குறிப்பாக ஜெனிவாவில் நடைபெறவுள்ள மனித உரிமைகள் சபை கூட்டத்தொடரின்போது இலங்கைக்கு எதிராக மக்களைத் தூண்டிவிட்டு இனங்களுக்கு எதிராக, மதங்களுக்கு எதிராக பிரச்சினைகளைத் தூண்டும் விதமாக நாங்கள் செயற்படுவோம் எனக் கூறி இந்தத் தடை உத்தரவை எடுத்திருந்தாலும்கூட, உண்மையில் அப்படியாக இருந்தால் இந்த நாட்டில் ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அரசின் முக்கிய அமைச்சர்களுக்கு எதிராகவே இந்தத் தடை உத்தரவு எடுக்கப்பட வேண்டும்.

இனங்களுக்கு எதிரான குழப்பங்களை அவர்களே செய்கின்றனர். அதாவது எங்களுடைய தமிழ் ஆலயங்களில் மத வழிபாடுகள் செய்வதைத் தடை செய்து, அந்த இடங்களில் பௌத்த விகாரைகளை அமைத்து இந்த அரசு, இந்த ஜனாதிபதி, ஆளுநர் போன்ற தொல்பொருள் அதிகாரிகளே இனங்களுக்கு எதிரான பிரச்சினைகளைத் தூண்டி விடுகின்றனரே தவிர நாங்கள் செய்யவில்லை.

இந்தப் போராட்டம் கூட அமைதியான போராட்டம். 3 ஆம் திகதி முதல் 6 ஆம் திகதி வரை பல்வேறு விடயங்களை முன்வைத்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

அதிலும் குறிப்பாகத் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விவகாரம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கான நீதி, ஜனாஸா எரிப்பு, மாவீரர் தினத்தன்று முகப்புத்தகத்தில் பதிவிட்ட 40 இளைஞர்களின் விடுதலை விவகாரம், தோட்டத்தொழிலாளர்களுக்கான ஆயிரம் ரூபா விவகாரம் உள்ளிட்ட ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு எதிராகவே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. - என்றுள்ளது.

## கருவுடன் ரிஷாத் அணி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கரு ஜயசூரியவை, அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன் உள்ளிட்ட உயர்பீட உறுப்பினர்கள் இன்று கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது நியாயமான சமூகத்துக்கான தேசிய இயக்கம், கடந்த காலங்களில் சிறுபான்மையினருக்கு இடம் பெறும் அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுத்து வருவதற்காகவும், விசேடமாக முஸ்லிம்களின் ஜனாஸா எரிப்பு விடயத்தில் எதிர்ப்பை வெளியிட்டமைக்கும் அந்த அமைப்புக்குத் தமது நன்றிகளை ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

அத்துடன், சிறுபான்மைச் சமூகம் தற்போது எதிர்நோக்கியுள்ள காணிப் பிரச்சினை, இராணுவ மயமாக்கல் உள்ளிட்ட பல பிரச்சினைகள் தொடர்பிலும் கரு ஜயசூரியவிடம் அவர் தெளிவுபடுத்தினார்.

இந்தச் சந்திப்பில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தவிசாளர் அமீர் அலி, செயலாளர் எஸ்.சுபைர்தீன், சிரேஷ்ட பிரதித் தலைவர் சஹீட் மற்றும் பொருளாளர் ஹூசைன் பைலா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## தாயும் பிள்ளையும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீடொன்றிலிருந்தே இன்று காலை தாயும் ஆண் பிள்ளையும் இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்ட தாய் 33 வயதுடையவர் எனவும், ஆண் பிள்ளையின் வயது 13 எனவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இந்தப் பிள்ளையின் தந்தை இராணுவ வீரர் எனவும் யுத்த காலத்தில் போர்க்களத்தில் இறந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த இருவரும் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பொறுப்பற்ற பணிப்பகிஷ்கரிப்பு

“பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்கு சீவன் போகுது” என்பார்கள்.

அந்த மாதிரி ஆகியிருக்கின்றது யாழ்ப்பாண அரச நிர்வாகம்.

ஆளும் தரப்பில் வெவ்வேறு கட்சிகளைச் சேர்ந்த வடக்கு ‘தளபதி’கள் நடத்தும் சண்டப் பிரசண்டத்தில் மக்கள் பாடு அதோகதி ஆகின்றது.

அந்த வரிசையில் இன்று திடீர் பஸ் போக்குவரத்துச் சீர்குலைவு அரங்கேறியுள்ளது. இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர்கள் இன்று காலை முதல் பணிப்புறக்கணிப்பில் குதித்தமைக்கு ஆளும் தரப்பு அரசியல்வாதிகளின் அரசியல் பிய்ச்சல் பிடுங்கலே காரணம் என்று தெரிய வருகின்றது.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வட பிராந்திய பிரதான முகாமையாளராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் நியமிக்கப்பட்டவரை யாழ் மாவட்ட இணைப்புக் குழுவின் தலைவரும், குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் தனது அரசியல் செல்வாக்கினால் பதவி ஏற்க விடாமல் முறியடித்தமைதான் விவகாரம் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

ஆளும் தரப்பில் வடக்கு விவகாரங்களில் செல்வாக்கு யாருக்கு அதிகம்? அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கா? அல்லது அங்கஜன் இராமநாதனுக்கா? இந்தப் பலப்பரீட்சைக்காக இன்றைய நாளில் செயலிழந்திருப்பது வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் சேவைதான்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் நியமனம் பெற்றவர் அப்படி ஒன்றும் செயல்திறன் மிக்க பாராட்டுக்குரிய நிர்வாகி அல்லர். யாழ் சாலை முகாமையாளராக இருந்தபோது நெருக்கடிகளை எதிர்கொண்டவர். ஊழியர்களின் தொழிற்சங்க நடவடிக்கை எதிர்ப்புகளை எதிர்கொண்டவர். யாழ் பஸ் நிலையத்துக்கு வழங்கப்பட்ட பகுதியில் சத்தம் சந்தடியின்றி கடைகள் அமைத்துக் கொடுத்து அதனால் நெருக்கடிகளில் சிக்குண்டவர். யாழ் மாநகர சபைக் காணியில் அமைத்துக் கொடுக்கப்பட்ட அல்லது ஏதோ நலன் பெற்றுக் கொண்டு தாரைவார்க்கப்பட்ட அந்தக் கடைகள் பற்றிய பிரச்சினையைத் தீர்க்க முடியாது யாழ்ப்பாணம் மாநகர சபை இன்னும் – இன்றும் – அல்லாடிக் கொண்டிருக்கின்றது.

இப்படிப் பூனையின் விளையாட்டுக்காக சுண்டெலிகளான பொதுமக்கள் அல்லல்படும் நிலைமை.

கொவிட் தொற்றுக்கு மத்தியில் இப்போதுதான் வழமையை நோக்கி நகரும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. நீண்டகாலமாகப் பூட்டிக் கிடந்த பாடசாலைகள் மெல்ல மெல்லத் திறந்து மாணவர்கள் வகுப்புகளுக்குத் திரும்பும் நிலைமை ஏற்படத் தொடங்கியுள்ளது.

எனினும் பொதுப்போக்குவரத்தை மாணவர்கள், ஆசிரியர்கள் பயன்படுத்துவதாயின் ஒவ்வொரு பஸ்ஸிலும் குறைந்த எண்ணிக்கையானோரே பயணிக்க வேண்டும் என்ற கட்டுப்பாடு உள்ளது. அப்போதுதான் கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த முடியும். சமூக இடைவெளியைப் பேணுவதற்கு அதிக பஸ்கள் சேவையில் ஈடுபடுகின்றமை கட்டாயம் என்ற சூழ்நிலை உள்ளது.

போக்குவரத்துக்காகப் பெரும்பாலும் மாணவர்கள் ‘பருவகால சீட்டையே’ கொள்வனவு செய்து வைத்துள்ளனர்.

இந்த நிலைமையில்தான் ஆளும் தரப்பு அரசியல்வாதிகளின் பிய்ச்சல் பிடுங்கலுக்காக வட பிராந்திய போக்குவரத்துச் சபை முன்னறிவித்தலின்றித் திடீர் தொழிற்சங்க நடவடிக்கை எடுத்து மக்களையும் பாடசாலை மாணவர்களையும் நடுவீதியில் விட்டிருக்கின்றது.

வடபிராந்தியபோக்குவரத்துச் சபை ஊழியர்கள் தமது சபையின் மூத்த நிர்வாகப் பதவிக்கான நியமனம் தொடர்பிலான சர்ச்சையில் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

ஆனால், அவர்களின் அந்தத் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு வடக்கு மக்களின் ஆதரவு கிட்டுமா என்பது கேள்விக்குறியே.

தியாக தீபம் திலீபனை நினைவு கூர்வதற்குத் தடை விதித்தமையை ஆட்சேபித்து வடக்கு, கிழக்கு மக்கள் முழுக் கடையடைப்பு நடத்திய போதும் –

முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி யாழ். பல்கலைக்கழத்தில் தகர்க்கப்பட்டமையை ஆட்சேபித்து வடக்கு, கிழக்கு மக்கள் முழு ஹர்த்தால் நடத்திய சமயத்திலும் –

அவற்றில் கலந்துகொள்ளாமல் வழமைபோல சேவையை நடத்த முற்பட்டவர்கள்தான் வட பிராந்திய போக்குவரத்து ஊழியர்கள். கடையடைப்பிலும், ஹர்த்தாலிலும், முழு முடக்கத்திலும் பங்கு கொள்ள முடியாத மேலிட அழுத்தம் – அரசியல் நெருக்குவாரம் – தமக்கு உள்ளது என்ற சாரப்பட அப்போது பதிலைப் பிரதிபலித்தவர்கள் அவர்கள்.

இப்போது கூடத் தமது விடயத்தில் அரசியல் தரப்புகளின் இழுபறிக்காக அவர்கள் பணிப் புறக்கணிப்புச் செய்கின்றார்கள். அதனால் அந்த விடயத்தில் வடக்கு மக்கள் சம்பந்தப்பட்டு ஆதரவு தரமாட்டார்கள் என்பது நிச்சயம்.

எது, எப்படி என்றாலும் அரசியல்வாதிகளின் இழுபறிகளில் தாமும் சிக்கிக்கொண்டு ஊழியர் பிரதிநிதிகள் மக்களின் சேவைக்கு ஆப்பு வைக்கின்றமை அநியாயமான – மனச்சாட்சிக்கு விரோதமான – பொறுப்பற்ற – சமூக விரோத – நடவடிக்கையன்றி வேறில்லை.

# சிங்கள மொழியில் மாத்திரமே சுதந்திர தினத்தில் தேசிய கீதம்!

## கமல் குணரத்ன தெரிவிப்பு



இலங்கையின் 73 ஆவது சுதந்திர தின நிகழ்வில் சிங்கள மொழியில் மாத்திரமே தேசிய கீதம் இசைக்கப்படும் என பாதுகாப்பு செயலாளர் கமல் குணரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இன்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் தற்போது காணப்படுகின்ற நிலைமை காரணமாக, இந்த முறை சுதந்திர தின நிகழ்வுகளைப் பார்வையிட மக்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன், சுதந்திர தின கொண்டாட்டங்களில் பங்கேற்கும் அனைத்துப் படையினரும் பி.சி.ஆர். அல்லது அன்டிஜன் சோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பரிசோதனை அறிக்கைகள் ஒழுங்காக இருந்தால் மாத்திரமே படையினர் அணி வகுப்பில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

# தடுப்புக் காவலில் உள்ள உறவுகளை விடுதலை செய்யக்கோரி போராட்டம்!

## கிளிநொச்சியில் தொடராக ஏற்பாடு



கிளிநொச்சி, பெப்.01

விடுதலைப்புலிகளுக்கு உதவிய சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது உறவுகளை விடுதலை செய்யக்கோரி, கிளிநொச்சியில் தொடர் போராட்டமொன்று இன்று (திங்கட்கிழமை) முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக ஒன்று கூடிய உறவுகள், கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். அதனைத் தொடர்ந்து ஏ9 பிரதான வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டுகொண்டிருந்த நிலையில் போக்குவரத்து சில நிமிடங்கள் பாதிக்கப்பட்டது.

இதேவேளை கடமையில் ஈடுபட்டிருந்த போக்குவரத்து பொலிஸார், போக்குவரத்தை சீர்செய்ய முற்பட்டனர். எனினும் போக்குவரத்தை முழுமையாக சீர் செய்ய முடியாத நிலையில் அதற்கு ஒத்துழைக்குமாறு பொலிஸார் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களிடம் கேட்டனர். அதற்கு அமைவாக வீதியின் ஒரு பகுதியின் ஊடான போக்குவரத்து இடம் பெற்றது.

இதன்போது சம்பவ இடத்திற்கு வருகைதந்த கிளிநொச்சி தலைமை பொலிஸ் அதிகாரி தலைமையிலான பொலிஸார், போராட்டகாரர்களை வீதியிலிருந்து கரைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொண்டனர். இந்த நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் நீண்ட நேரம் பேச்சு இடம்பெற்றது.

மேலும் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், இன்று முதல் தொடர்ச்சியான போராட்டத்தை முன்னெடுக்க உள்ளனர் எனத் தெரிவிக்கின்றனர்.

இந்தப் போராட்டம் பந்தல் அமைக்கப்பட்டு இன்று முதல் தொடர் போராட்டமாக கைதானவர்களின் உறவுகளால் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# இலங்கை தேசியக் கொடியை இன்று முதல் பறக்க விடுக!

73 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு வீடுகள், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், வாகனங்களில் தேசியக் கொடியை பறக்கவிடுமாறு அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இன்று(திங்கட்கிழமை) முதல் எதிர்வரும் 7ஆம் திகதி வரை ஒரு வாரத்துக்கு தேசியக் கொடியைப் பறக்கவிடுமாறு தேசியப் பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு தெரிவித்துள்ளது.

அரச நிறுவனங்களின் கட்டடங்களை எதிர்வரும் 3 ஆம், 4 ஆம் திகதிகளில் ஒளி விளக்குகளால் அலங்கரிக்குமாறும் அரச நிறுவனங்களின் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

# பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை போராட்டத்துக்கு ரெலோ பூரண ஆதரவு!

பொத்துவிலில் ஆரம்பித்து பொலிகண்டி வரை நடைபெறவுள்ள வடக்கு கிழக்கு சிவில் அமைப்புக்களின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள தமிழின ஒடுக்குமுறைக்கு எதிரான ஜனநாயகப் போராட்டத்துக்கு ரெலோ அமைப்பு தனது முழுமையான ஆதரவைத் தெரிவிக்கின்றது.

இது தொடர்பில் அந்த அமைப்பால் ஊடகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள பத்திரிகை செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

தமிழ் மக்களின் இன விடுதலைக்காகத் தொடர்ச்சியாக ஜனநாயக முறையில் போராடி வரும் எமது கட்சி அண்மைக் காலங்களில் கூர்மையடைந்துள்ள தமிழின அழிப்பைத் தடுத்து நிறுத்த பல இடங்களிலும் களத்தில் நின்று குரல் கொடுப்பதுடன் சர்வதேச ரீதியாகவும் இலங்கை அரசாங்கத்தின் அட்டூழியங்களை மனித உரிமைகள் சார்பான அமைப்புக்களுக்கும், மனிதவுரிமைகளை பாதுகாக்கும் நாடுகளுக்கும் அறிக்கை இட்டு அழுத்தங்களை இயன்ற வரை பிரயோகித்து வருகின்றது. இந்தச் செயற்பாடு தமிழர் தாயகப் பகுதியின் எட்டு மாவட்டங்களிலும் தொடர்ந்து எம்மால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன் தொடர்ச்சியாக வடக்கு, கிழக்கு இணைந்த ஒரு ஜனநாயகப் போராட்டத்தை சிவில் அமைப்புக்கள் ஏற்பாடு செய்துள்ளமையை நாம் வரவேற்கின்றோம். அது மட்டுமல்ல எமது பூரண ஆதரவையும் தெரிவிக்கின்றோம். அத்துடன் இந்த ஜனநாயகப் போராட்டத்தில் தமிழர் தாயகத்தில் உள்ள அனைத்து தமிழ்த் தேசியம் சார்ந்த அமைப்புக்களையும் தமிழ் பேசும் முஸ்லிம் அமைப்புக்களையும் ஆதரவு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். என்றுள்ளது.

# திருப்பதி கோவில் புஷ்கரணியில் பக்தர்கள் புனித நீராட அனுமதி



திருமலை சோசலம் வனப்பகுதியில் 66 கோடி புண்ணியத் தீர்த்தம் உள்ளது. அதில் முக்கியமானவை 1,008, அவற்றுள் சிறந்தவை 216, இவைகளில் சகல புண்ணியங்களையும் தரக்கூடியது 108. முத்தி தருபவை 26. எல்லா விதத்திலும் மேன்மைகளையும், சிறப்பையும், மகிமையையும் கொண்ட அதி விசேடமான தீர்த்தங்கள் ஏழு. அந்த ஏழு தீர்த்தத்தில் மிக முக்கியமானது ஶ்ரீவாரி புஷ்கரணி எனப்படும் தெப்பக்குளம் ஆகும்.

ஶ்ரீவாரி புஷ்கரணியில் 2019ஆம் ஆண்டு மார்ச் மாதம் இறுதியில் இருந்து கொரோனாப் பரவலால் பக்தர்கள் புனித நீராடவும், திருப்பதி ஏழுமலையான் கோவிலில் சாமி தரிசனம் செய்யவும் அனுமதிக்கப்படவில்லை.

ஜூன் மாதம் 8ஆம் திகதியில் இருந்து ஏழுமலையான் கோவிலில் பக்தர்கள் சாமி தரிசனம் செய்ய அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். ஆனால் ஶ்ரீவாரி புஷ்கரணியில் பக்தர்கள் புனித நீராட அனுமதிக்கப்படவில்லை. ஶ்ரீவாரி புஷ்கரணிக்குச் செல்லும் நுழைவு வாயிலின் கதவு மூடப்பட்டது.

இந்த நிலையில் மத்திய, மாநில உள்துறை அமைச்சகம் சமீபத்தில் தீர்த்தம் மற்றும் வழிபாட்டுத்தலங்களில் பக்தர்கள், யாத்திரிகர்கள் கடைப்பிடிக்க வேண்டிய வழிகாட்டும் நெறிமுறைகளை வெளியிட்டது. அதன்படி திருப்பதி ஏழுமலையான் கோவில் புஷ்கரணியில் பெப்ரவரி மாதம், முதல் வாரத்தில் இருந்து கொரோனாத் தடுப்பு விதிமுறைகளை கடைப்பிடித்து பக்தர்கள் புனித நீராட அனுமதிக்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இதுதொடர்பாக திருமலை - திருப்பதி தேவஸ்தான அதிகாரிகள் தீவிர ஆலோசனை நடத்தி வருகின்றனர். அறங்காவலர் குழு தலைவர் ஒய்.வி.சுப்பாரெட்டி, தேவஸ்தான முதன்மைச் செயல் அலுவலர் ஜவஹர்ரெட்டியை சந்தித்து, ஆலோசனை நடத்தி, விரைவில் ஶ்ரீவாரி புஷ்கரணியில் பக்தர்கள் புனித நீராட உரிய திகதியை அறிவிப்பார், என தேவஸ்தான அதிகாரிகள் தெரிவித்தனர்.

# கடும் குளிரால் உறைந்து போன நீர் நிலைகள்: காஷ்மீரில் குடிதண்ணீர் பஞ்சம் ஏற்படும் அபாயம்!



காஷ்மீரில் நிலவும் கடும் குளிரால் குடிதண்ணீர் பஞ்சம் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கடந்த சில வாரங்களாக நிலவும் உறைபனியால் ஏரிகள், குடிதண்ணீர் வழங்கும் நீர்நிலைகள், குடிதண்ணீர்த் தொட்டிகள், குழாய்கள் என அனைத்தும் பனியாக உறைந்துபோயுள்ளன.

மேலும் சாலைகள் முழுவதும் பனிமூடிக் காணப்படுவதால் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக தெற்கு காஷ்மீரில் உள்ள சோபியான் மாவட்டத்தில் மைனஸ் 15 டிகிரியும், குல்காம் மற்றும் புல்வாமா ஆகிய பகுதிகளில் மைனஸ் 10 முதல் மைனஸ் 12 டிகிரி வெப்பநிலை உள்ளமையால் இங்குள்ள மக்கள் குடிதண்ணீருக்கு அலையும் நிலை ஏற்பட்டுள்ளது.

உறைபனி நீடித்தால் கடந்த 30 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு குடிதண்ணீர் பஞ்சம் ஏற்படும் என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

# இந்திய கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவில் பெற்ற வெற்றி நமது நாட்டின் வலிமையை காட்டுகிறது – நிர்மலா சீதாராமன்

நடப்பு 2021 - 22 நிதி ஆண்டுக்கான மத்திய பட்ஜெட்டை நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், நாடாளுமன்றத்தில் இன்று காலை 11 மணிக்கு தாக்கல் செய்து பேசினார்.

நிர்மலா சீதாராமன் பேசும்பொழுது, இதுவரை இல்லாத வகையில், ஒரு நாட்டை அல்லது நாட்டின் ஒரு பகுதியை பேரிடர் தாக்கிய காலத்தில் நடப்பு ஆண்டுக்கான பட்ஜெட் தயாராகி உள்ளது. ஆனால், கொரோனா பாதிப்புகளில் இருந்து நாம் உறுதியுடன் போராடி மீண்டு வந்துள்ளோம் என்று மத்திய நிதி அமைச்சர் கூறியுள்ளார்.

ஆஸ்திரேலியாவில் இந்திய கிரிக்கெட் அணி அடைந்த வெற்றி, நமது வலிமையை காட்டுகிறது. உலக நாடுகளால் நம்பிக்கைக்குரிய நாடாக இந்தியா பார்க்கப்படுகிறது என அவர் பேசினார்.

கொரோனா பெரும் தொற்று ஏற்படும் என நாம் கற்பனை செய்து பார்க்கவில்லை. என்றும் கொரோனாத் தடுப்பூசி கிடைக்க பாடுபட்ட விஞ்ஞானிகளுக்கு நன்றி எனவும் அவர் தெரிவித்து உள்ளார்.

# இந்திய நாடாளுமன்றத்தில் பட்ஜெட்டை தாக்கல் செய்தார் நிர்மலா சீதாராமன்



நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர், கடந்த 29ம் திகதி தொடங்கியது. ஆண்டின் முதல் கூட்டத்தொடர் என்ற வகையில் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த், நாடாளுமன்ற இரு சபைகளின் கூட்டு கூட்டத்தில் உரையாற்றினார். அதைத் தொடர்ந்து நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பொருளாதார ஆய்வறிக்கையை தாக்கல் செய்தார். அடுத்த ஆண்டு நாட்டின் பொருளாதார வளர்ச்சி 11 சதவீதம் அளவுக்கு இருக்கும் என எதிர்பார்ப்பதாக அதில் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் 2 நாள்கள் விடுமுறைக்கு பிறகு இன்று காலை 11 மணிக்கு நாடாளுமன்றம் மீண்டும் கூடியது. அப்போது, நிதி அமைச்சர் நிர்மலாசீதாராமன் 2021-2022ஆம் நிதியாண்டுக்கான மத்திய பட்ஜெட்டை மக்களவையில் தாக்கல் செய்து உரையாற்றினார். இது அவர் தாக்கல் செய்த 3வது பட்ஜெட் ஆகும்.

முன்னதாக, நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், இணை அமைச்சர் அனுராக் தாகூர் மற்றும் நிதித் துறை குழுவினர் இன்று காலை ஜனாதிபதி ராம்நாத் கோவிந்தை சந்தித்தனர். அவரிடம் பட்ஜெட் தாக்கல் தொடர்பாக எடுத்துரைத்தனர். அதன்பின்னர் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், இணை அமைச்சர் அனுராக் தாகூர் மற்றும் நிதித் துறை அதிகாரிகள் நாடாளுமன்றத்திற்கு புறப்பட்டனர். முதலில் அமைச்சரவை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பட்ஜெட்டுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இந்தியாவில் முதல் முறையாக காகிதமில்லா பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பட்ஜெட்டின் அங்கீகரிக்கப்பட்ட பிரதி மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டு, உடனே இணையத்தில் வெளியிடப்பட்டது.

கொரோனா வைரஸ் பெருந்தொற்றால், நாடு இதுவரை காணாத நீண்ட ஊரடங்கு, பொது முடக்கத்தால் பாதிக்கப்பட்டது. தற்போது கொரோனாக் கட்டுப்படுத்தப்பட்டு, தொழில், வர்த்தக நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டு, பொருளாதார பின்னடைவு மெல்ல மெல்ல மீண்டு வருகிறது. இந்த சூழ்நிலையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பட்ஜெட்டில், நிலையான பொருளாதார மறுமலர்ச்சிக்கு வழிவகுக்கும் கொள்கை அறிவிப்புகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

குறிப்பாக வழக்கம்போல், இந்த ஆண்டும் பட்ஜெட்டில் தனிநபர் வருமான வரிவிலக்கு உச்ச வரம்பு உயர்த்தப்படுமா? என்பதுதான் சாமானிய மக்களின் கேள்வியாக இருக்கிறது. பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் வகையில் ஏதேனும் அறிவிப்பு வெளியாகுமா? என்று தொழில் துறையினர் எதிர்பார்க்கின்றனர்.

கடைசியாக, 2014 - 15ஆம் ஆண்டு பட்ஜெட்டில் வருமான வரி விலக்கு உச்சவரம்பில் மாற்றம் கொண்டு வரப்பட்டு, உச்சவரம்பு ரூ.2.5 லட்சமாக உயர்த்தப்பட்டது. அதற்கு பிறகு தாக்கல் செய்யப்பட்ட பட்ஜெட்டுகளில், வருமான வரி செலுத்துவதில் குறிப்பிட்ட சில மாற்றங்கள் மட்டுமே அறிவிக்கப்பட்டன. வருமான வரி விலக்கு உச்சவரம்பில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை.

# ஒன்லைனில் நடக்கும் சர்வதேச நிகழ்வுகளுக்கு அரசு அனுமதி கட்டாயம்; வெளியுறவு அமைச்சகம்



ஒன்லைனில் சர்வதேச மாநாடுகள், பயிற்சிகள், கருத்தரங்குகள் உள்ளிட்டவற்றை நடத்த அரசின் முன் அனுமதி அவசியம் என வெளியுறவு அமைச்சகம் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

அதே நேரம், வடகிழக்கு மாநிலங்கள், ஜம்மு காஷ்மீர், லடாக் மற்றும் இந்தியாவின் உள்நாட்டு பாதுகாப்பு தொடர்பான எந்த நிகழ்வையும் ஒன்லைனில் நடத்தக் கூடாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கட்டுப்பாடு, அனைத்து மத்திய அமைச்சகங்கள், துறைகள், பொதுத் துறை நிறுவனங்கள், அரசு உதவி பெறும் பல்கலைக்கழகங்கள், மத்திய- மாநில அரசுகளின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து அமைப்புகளுக்கும் பொருந்தும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இதுதவிர, ஒன்லைனில் சர்வதேச நிகழ்வுகளை நடத்த விரும்பும் நிறுவனங்களும், அமைப்புகளும் சம்பந்தப்பட்ட அமைச்சக செயலரிடம் முன் அனுமதியை பெறுதல் கட்டாயமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வெளிப்படைத் தன்மையான பட்ஜெட்!

## பட்ஜெட்டுக்கு மோடி பாராட்டு

சாதாரண மக்களின் மீது வரிச்சுமைகள் சுமத்தப்படும் என பலரும் எதிர்பார்த்த நிலையில், வெளிப்படைத் தன்மை வாய்ந்த பட்ஜெட்டை நிதி அமைச்சர் தாக்கல் செய்துள்ளார் என பிரதமர் மோடி பாராட்டியுள்ளார். இதை "ஆத்மநிர்பர் பட்ஜெட்" என அவர் வர்ணித்துள்ளார்.

விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும் திட்டத்தை நோக்கிய பட்ஜெட் என்று குறிப்பிட்டுள்ள மோடி, விவசாயிகளுக்கு இனி மேல் எளிதாக வங்கிக் கடன்கள் கிடைக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

இளைஞர்களுக்கான புதிய வாய்ப்புகளை அதிகப்படுத்தும் திட்டங்கள் பட்ஜெட்டில் இடம் பெற்றுள்ளன என பாராட்டியுள்ள அவர், உட்கட்டமைப்பு வசதிகள், தொழில்நுட்ப மேம்பாடு, புதிய சீர்திருத்தங்கள் உள்ளிட்டவற்றுக்கும் இந்த பட்ஜெட் வழிவகை செய்யும் என தெரிவித்துள்ளார்.



# ரஷ்யாவில் அதிபருக்கு எதிராக போராட்டம் கலந்துகொண்ட ஐயாயிரம் பேர் கைது!



ரஷ்யாவில் முக்கிய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்சி நவால்னி. கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் நச்சு தாக்குதல் காரணமாக நவால்னி கோமா நிலைக்குச் சென்றார். இதையடுத்து ஜேர்மனியில் உள்ள மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு தீவிர சிகிச்சைக்கு பின்பு அவர் உயிர் பிழைத்தார். இந்த நிலையில் கடந்த மாதம் 17 ஆம் திகதி நவால்னி ரஷ்யா திரும்பிய நிலையில் மொஸ்க்கோ விமான நிலையம் வந்த அவரை மோசடி வழக்கு ஒன்றில் பரோல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டின் பேரில் பொலிஸார் கைது செய்தனர். நவால்னி கைது செய்யப்பட்டதற்கு எதிர்க்கட்சியினர் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

அவர்கள் நவால்னியை விடுதலை செய்யக்கோரி போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். கடந்த வார இறுதியில் ரஷ்யாவில் போராட்டம் தீவிரம் அடைந்தது. இந்த நிலையில் நவால்னியை விடுவிக்க கோரியும் அதிபர் புடின் பதவி விலகக்கோரியும் கடந்த 2 நாள்களாக ரஷ்யாவில் எதிர்க்கட்சியினரின் ஏற்பாட்டில் தீவிர போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மத்திய பாதுகாப்பு படை தலைமையகம் இருக்கும் மாஸ்கோவின் லுபியங்கா சதுக்கத்தில் முதலில் போராட்டம் நடத்த நேற்று நவால்னி ஆதரவாளர்கள் அழைப்பு விடுத்தனர். அங்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டு இருந்ததால் போராட்டம் அருகில் உள்ள தெருக்களுக்கு மாற்றப்பட்டது. போராட்டம் நடத்தியவர்களை பொலிஸார் கைது செய்து பஸ்களில் ஏற்றிக் கொண்டிருந்தனர்.

அப்போது ஆயிரக்கணக்கானோர் புடின் ராஜினாமா செய்ய வேண்டும் என்று கோஷம் எழுப்பினர். இது சம்பந்தமான வீடியோவும் வெளியானது. ரஷ்யாவின் மற்றொரு பெரிய நகரமான செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் பல்லாயிரக்கணக்கானோர் போராட்டத்துக்கு அணி திரண்டு சென்றனர். அவர்களை பொலிஸார் தடுத்து நிறுத்தினர். போராட்டங்களை ஒடுக்குவதற்காக தலைநகர் மாஸ்கோ உள்ளிட்ட முக்கிய நகரங்களில் பாதுகாப்பு படையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர். அந்த நகரங்களை பாதுகாப்பு படையினர் முடக்கினார்கள். மேலும் அங்கு போராட்டம் நடத்திய 5 ஆயிரம் பேரை பொலிஸார் கைது செய்தனர்.

இந்த நிலையில் ரஷ்யாவில் அமைதியாக போராடும் போராட்டக்காரர்கள் மற்றும் பத்திரிகையாளர்களுக்கு எதிராக ரஷ்ய அதிகாரிகள் செயல்படுவதாக அமெரிக்கா கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் ஆண்டனி பிளிங்கன் டுவிட்டரில் கருத்து தெரிவித்து உள்ளார். அவரது கருத்தை ரஷ்யா நிராகரித்தது.

ரஷ்யாவில் போராட்டக்காரர்களுக்கு ஆதரவு தெரிவித்து நாட்டின் நிலைமையை சீர்குலைக்க அமெரிக்கா முயற்சிப்பதாகவும், ரஷ்யாவின் உள்விவகாரங்களில் அமெரிக்கா தலையிடுவதாகவும் ரஷ்யா குற்றம்சாட்டி உள்ளது.

## ஹொங்கொங் மக்களுக்கான சிறப்பு விசா திட்டத்தைத் தொடங்கியது இங்கிலாந்து



இங்கிலாந்தின் காலணி ஆதிக்கத்தின் கீழ் ஹொங்கொங் இருந்தபோது, அந்த பிராந்திய மக்களுக்கு இங்கிலாந்தில் நிரந்தர குடியேற்ற உரிமையை 1997 ஆம் ஆண்டு வரை வழங்கக்கூடிய கடவுச் சீட்டு வழங்கப்பட்டது.

இந்த நிலையில் சர்ச்சைக்குரிய தேசியப் பாதுகாப்பு சட் டத்தை சீனா ஹொங்கொங்கில் அமுல்படுத்தியதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக தங்கள் நாட்டின் கடவுச் சீட்டு வைத்திருப்பவர்கள் தங்கள் நாட்டில் 5 ஆண்டுகள் வசிப்பதற்காக விண்ணப்பிக்கலாம் என்கிற புதிய விசாத் திட்டத்தை இங்கிலாந்து அரசு அண்மையில் அறிவித்தது.

இதற்கு கடும் கண்டனம் தெரிவித்த சீனா தங்கள் நாட்டின் உள்விவகாரங்களில் தலையிட வேண்டாம் என கூறி இங்கிலாந்தை கண்டித்தது.

மேலும் ஹொங்கொங் மக்களுக்கு இங்கிலாந்து வழங்கியிருந்த கடவுச் சீட்டு இனி செல்லாது எனவும் சீனா அறிவித்தது.

இந்த நிலையில் சீனாவின் கடும் எதிர்ப்பையும் மீறி ஹொங்கொங் மக்களுக்கான புதிய விசா திட்டத்தை இங்கிலாந்து அரசு நேற்று தொடங்கியது. 3 லட்சத்துக்கும் அதிகமானோர் இந்த புதிய விசாவைப் பெற விண்ணப்பிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாக இங்கிலாந்தின் குடியுரிமை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஹொங்கொங் மக்களுக்கான புதிய விசா திட்டம் குறித்து இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சன் கூறுகையில், இந்த நடவடிக்கை இங்கிலாந்தின் முன்னணி காலணியான ஹொங்கொங்குடன் இங்கிலாந்தின் வரலாறு மற்றும் நட்பின் ஆழமான உறவுகளை கௌரவிக்கின்றது என்றார்.

## மியன்மாரில் ராணுவ புரட்சி ஆங் சான் சூகி சிறைப்பிடிப்பு

தேர்தலில் எதிர்பார்த்ததைவிட அதிக எண்ணிக்கையிலான வாக்குகள் பதிவானதாக தேர்தல் ஆணையம் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன. இதில், ஆட்சி அமைப்பதற்கு தேவையான பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றதாக ஆங் சான் சூகியின் தேசிய ஜனநாயக கட்சி அறிவித்தது.

இந்தநிலையில் ஆங் சான் சூகி இராணுவத்தினால் சிறைபிடிக்கப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது. மியன்மாரில் ஆங் சான் சூகி உள்ளிட்ட தலைவர்கள் இராணுவத்தினால் சிறைபிடிக்கப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

முன்னதாக ஆங் சான் சூகி கூறுகையில், நான் எங்கள் மக்களிடம் கடுமையாக பதிலளிக்க வேண்டாம் என்று சொல்ல விரும்புகிறேன். அவர்கள் சட்டத்தின்படி செயற்பட வேண்டும் என்று நான் விரும்புகிறேன் என்றார்.



## சீனாவின் உகான் உணவுச் சந்தையில் உலக சுகாதார நிறுவன நிபுணர் குழு ஆய்வு



கொரோனா வைரஸ் தோன்றியது எப்படி என்று ஆய்வு செய்ய சீனாவின் உகான் நகருக்கு சென்றுள்ள உலக சுகாதார நிறுவனத்தின் நிபுணர் குழு அங்குள்ள உணவு சந்தையை நேரில் பார்வையிட்டது.

சீனாவின் உகான் நகரில்தான் கொரோனா வைரஸ் முதன் முதலில் தோன்றியது. ஆனால், இதை சீனா மறுத்து வருகிறது. கொரோனா தோன்றியது எப்படி என்று விசாரணை நடத்த ஒரு நிபுணர் குழுவை உலக சுகாதார நிறுவனம் நியமித்துள்ளது.

இந்த நிபுணர்கள், கால்நடை மருத்துவம், தொற்றுநோய் ஆய்வு, உணவு பாதுகாப்பு, கொள்ளை நோய் ஆய்வு ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்றவர்கள் ஆவர்.

இந்த குழு, சீனாவுக்கு சென்று விசாரணை நடத்துவதற்கு சீனா எதிர்ப்பு தெரிவித்து வந்த நிலையில், ஒருவழியாக சமீபத்தில் சம்மதம் தெரிவித்தது. இதையடுத்து, நிபுணர் குழு சீனாவுக்கு சென்றது. 14 நாள்கள் தனிமைப்படுத்தலுக்கு பின்பு 29 ஆம் திகதி தனது விசாரணையை தொடங்கியது.

கொரோனாவுக்கு எதிரான சீனாவின் ஆரம்ப கால அனுபவத்தை விளக்கும் அருங்காட்சியகத்தை அவர்கள் பார்வையிட்டனர். சீன விஞ்ஞானிகளிடம் விசாரணை நடத்தினர்.

ஆரம்ப காலத்தில் கொரோனா நோயாளிகள் சிகிச்சை பெற்ற 2 வைத்தியசாலைகளையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

இந்தநிலையில், 3 ஆவது நாளாக நேற்றும் உகான் நகரில் அவர்களது ஆய்வு தொடர்ந்தது. அங்குள்ள பெரிய உணவு சந்தைகளில் ஒன்றான பைசூ சந்தைக்கு நேரில் சென்றனர். இந்த சந்தையில் விலங்குகள் உணவுக்காக உயிருடன் விற்கப்படுகின்றன. இந்த விலங்குகளில் இருந்து கொரோனா பரவி இருக்கலாம் என்று பரவலாக கருதப்படுகிறது.

பொது முடக்க காலத்தில் கூட உகான் நகர் முழுவதற்கும் இங்கிருந்துதான் உயிரினங்கள் விநியோகிக்கப்பட்டன. அந்தச் சந்தையை பகுதி பகுதியாக நிபுணர் குழுவினர் நடந்து சென்று ஆய்வு செய்தனர். அப்போது, சீன அதிகாரிகளும் உடன் இருந்தனர்.

கொரோனா வைரஸ் செயற்கையாக உருவாக்கப்பட்டதாக ஒரு குற்றச்சாட்டு எழுந்த நிலையில் உகான் வைராலஜி இன்ஸ்டிடியூட்டுக்கும் நிபுணர் குழுவினர் செல்வதற்கு திட்டமிட்டுள்ளனர்.

இருப்பினும், இந்த ஒரு பயணத்திலேயே கொரோனாவின் தோற்றம் பற்றி கண்டுபிடித்து விட முடியுமா என்று பல தரப்பிலும் சந்தேகம் எழுப்பப்படுகிறது.

## ஆட்சியைப் பிடித்தது இராணுவம் மியன்மாரில் அவசரகால நிலைமை

மியன்மார் நாட்டில் கொரோனா தொற்று அச்சுறுத்தலுக்கு மத்தியில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. மொத்தமுள்ள 642 இடங்களுக்கு அந்த நாட்டின் தலைவர் ஆங் சான் சூகி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கட்சி உட்பட 90 இற்கும் மேற்பட்ட கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இதில், ஆட்சி அமைப்பதற்கு தேவையான பெரும்பான்மையுடன் ஆங் சான் சூகியின் தேசிய ஜனநாயக கட்சி வெற்றி பெற்றது. இராணுவத்தின் ஆதரவு பெற்ற கட்சிகள் தோல்வியடைந்தன.

இந்த தேர்தலில் மோசடி நடைபெற்று இருப்பதாக இராணுவத் தரப்பிலிருந்து தொடர்ந்தும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வந்தது. ஆட்சியை இராணுவம் கவிழ்க்கலாம் என்றும் தகவல்கள் வெளியாகின.



இந்த நிலையில் இன்று மியன்மாரில் திடீரென இராணுவப் புரட்சி ஏற்பட்டது. ஆங் சான் சூகி இன்று அதிகாலையில் இராணுவத்தினால் சிறைபிடிக்கப்பட்டார். இதேபோல் அதிபர் வின் மின்ட் மற்றும் அமைச்சர்கள், ஆளுங்கட்சியின் நிர்வாகக் குழுவின் உறுப்பினர்களும் சிறைப்பிடிக்கப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மியன்மாரில் ஓராண்டுக்கு நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப்பட்டிருப்பதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. இதனை உறுதிப்படுத்தும் வகையில் நாட்டை இராணுவம் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்திருப்பதாகவும், ஓராண்டுக்கு இது நீடிக்கும் என்றும் இராணுவத் தொலைக்காட்சியில் செய்தி வெளியிடப்பட்டது.

மியன்மாரில் இராணுவப்புரட்சி குறித்து அமெரிக்கா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் கவலை தெரிவித்துள்ளன. மியன்மார் இராணுவம் சட்டத்தின் ஆட்சிக்கு மரியாதை அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளன.

## ஆப்கானிஸ்தானில் தற்கொலைத் தாக்குதல் 8 இராணுவ வீரர்கள் உடல் சிதறி பலி!

ஆப்கானிஸ்தானில் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவர தலிபான் பயங்கரவாத அமைப்புக்கும் அந்த நாட்டு அரசுக்கும் இடையே அமைதி பேச்சு நடந்து வரும் அதே வேளையில் அங்கு பயங்கரவாதத் தாக்குதல்களும் தொடர்ந்து வருகின்றன. இராணுவ வீரர்கள் மற்றும் பொலிஸாரை குறிவைத்து பயங்கரவாதிகள் தொடர் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இந்தநிலையில் ஆப்கானிஸ்தானில் கிழக்குப் பகுதியில் உள்ள நங்கார்ஹர் மாகாணத்தில் ஹம்வீ நகரில் இராணுவ வீரர்களின் அணிவகுப்பை குறிவைத்து தற்கொலைப் படைத் தாக்குதல் நடத்தப்பட்டது.

வெடி குண்டுகள் நிரப்பிய காரை ஓட்டி வந்த தற்கொலைப் படை பயங்கரவாதி ஒருவர் அந்தக் காரை இராணுவ வீரர்களின் ஒரு வாகனம் மீது மோதி வெடிக்கச் செய்ததில் பெரிய சத்தத்துடன் வெடித்துச் சிதறின. இதில் அந்தப் பகுதியே அதிர்ந்தது.

பயங்கரவாதிகளின் இந்த தற்கொலைப்படை தாக்குதலில் 8 இராணுவ வீரர்கள் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி உயிரிழந்தனர். இந்த தாக்குதலுக்கு தலிபான் பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

# இளைஞர், யுவதிகளுக்கு இராணுவப் பயிற்சி விக்னேஸ்வரனுக்கு சரத் வீரசேகரவின் பதில்!



18 வயதிற்கு மேற்பட்ட இளைஞர் யுவதிகளுக்கு இராணுவப் பயிற்சி வழங்குவது தொடர்பான தனது கருத்தை நாடாளுமன்ற உறுப்பினர் சி.வீ.விக்னேஸ்வரன் வரவேற்றிருப்பது தனக்கு மகிழ்ச்சி அளிப்பதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

தமிழ் ஊடகம் ஒன்றுக்கு அவர் இதைக் குறிப்பிட்டுள்ளார்.

சரத் வீரசேகர தொடர்ந்து தெரிவிக்கையில்:-

ஒரு விடயத்திலாவது இருவருக்கும் உடன்பாடான கருத்து ஏற்பட்டிருக்கின்றமையை வரவேற்ற அவர், இராணுவ பயிற்சி வழங்கும் இந்தத் திட்டத்துக்கு சி.வீ.விக்னேஸ்வரன் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் கோரினார்.

ஒவ்வொரு பிரதேசத்திற்கும் இன, மொழி அடிப்படையில் பயிற்சி வழங்க முடியாது எனவும் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களுக்கு தனித்தனியாக அன்றி ஒன்றாக கலந்தே பயிற்சி அளிக்க இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதனூடாக இனங்களுக்கிடையில் நட்புறவையும் நல்லிணக்கத்தையும் வளர்க்க முடியும் என்றும் அவர் கூறினார்.

பல விடயங்களில் இருவருக்கும் முரண்பாடான நிலைப்பாடுகள் இருந்தாலும் நாட்டுக்குப் பொதுவான விடயத்தில் ஒத்துழைக்க முன்வந்திருக்கின்றமை மகிழ்ச்சி அளிப்பதாக கூறிய அவர், ஏனைய தமிழ் தலைவர்களும் இந்த வழியை பின்பற்ற வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இந்த செயற்பாட்டிற்கு சி.வீ.விக்னேஸ்வரன் ஒத்துழைக்க வேண்டும் என்றும் அவர் கோரினார்.

விக்னேஸ்வரனின் இது தொடர்பான செய்தியை 'காலைக்கதிர்' வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மோட்டார் சைக்கிள் விபத்து இளைஞர் ஒருவர் சாவடைவு!

மட்டக்களப்பு - கொழும்பு நெடுஞ்சாலையின் மாவடிவேம்பு பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் செங்கலடியில் வசிக்கும் இராமகிருஷ்ணன் மயூரன் (வயது 27) என்பவரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி இளைஞன் சந்திவெளியிலிருந்து மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருக்கும்போது மாவடிவேம்பு பகுதியில் வைத்து எதிரே வந்த மற்றுமோர் மோட்டார் சைக்கிளில் மோதி படுகாயமடைந்த நிலையில், சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.



அவரது சடலம் மாவடிவேம்பு பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து, பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## தனிமைப்படுத்தலிலிருந்து சில பகுதிகள் விடுவிப்பு!

இலங்கையில் கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக தனிமைப்படுத்தப்பட்டிருந்த சில பகுதிகள், இன்று (திங்கட்கிழமை) அதிகாலை 5 மணி முதல் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

கொரோனா தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும், இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்தவகையில், நாரஹேன்பிட்ட பொலிஸ் பிரிவிற்குட்பட்ட 100 ஆம் இலக்க தோட்டம் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

மேலும், துறைமுக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முகத்துவாரம் – அன்றூஸ் வீதி, புனித அன்றூஸ் பகுதி ஆகியவற்றின் தனிமைப்படுத்தலும் தளர்த்தப்பட்டுள்ளன.

அத்தோடு, பேலியகொடை பொலிஸ் பிரிவின் கங்கபட கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட 90 ஆம் இலக்க தோட்டம் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சுதந்திர தினத்தினை முன்னிட்டு நாடு முழுவதும் மரக் கன்றுகள்

73ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டத்துடன் இணைந்து நாடு முழுவதும் எதிர்வரும் வியாழக்கிழமை மரக் கன்றுகள் நடும் திட்டத்தை அரசாங்கம் ஆரம்பிக்கவுள்ளது.

மாவட்ட மற்றும் பிராந்திய செயலாளர்கள் மூலம் கிராம சேவகர் பிரிவுகளில் இந்தத் திட்டம் செயற்படுத்தப்படும் என்று தேசிய பாதுகாப்பு, உள்துறை மற்றும் பேரிடர் மேலாண்மை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அதன்படி 73 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு பொது இடங்கள், அரசு வளாகங்கள் மற்றும் ஒவ்வொரு வீட்டிலும் தேசிய நலன் கருதி ஒரு மரக்கன்றுகளை நடுகை செய்வது தொடர்பாகப் பரிசீலிக்க அரசு நிறுவனங்களின் தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையில் சுதந்திர தினக் கொண்டாட்டத்தை முன்னிட்டு இன்று முதல் பெப்ரவரி 7 ஆம் திகதி வரை குடியிருப்புகள், வணிகங்கள் மற்றும் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் தேசியக் கொடியை ஏற்றுமாறு அமைச்சகம் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டது.

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
| --- | --- |
| பிறந்த திகதி - 1986.04.15 | பிறந்த திகதி - 1975.05.19 |
| மதம் - இந்து V | மதம் - இந்து V |
| நட்சத்திரம் - திருவாதிரை | நட்சத்திரம் - திருவாதிரை |
| செவ் - --- | செவ் - --- |
| பாவம் - 64 | பாவம் - 38 |
| கல்வி - IT Engineering | கல்வி - Bsc பட்டதாரி |
| தொழில் - IT Engineer | தொழில் - ஆசிரியை |
| எதிர்பார்ப்பு - படித்த அழகான பட்டதாரி மணமகள் | எதிர்பார்ப்பு - அரச உத்தியோகம் |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.

க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

குஞ்சர் கடையடி,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை
077 3434 415
077 8578 528

# சட்டவிரோதமாக விடுவிக்கப்பட்ட பகுதி காத்தான்குடியில் மீள முடக்கப்பட்டது!

மட்டக்களப்பு, ஜன. 01

மட்டக்களப்பு - காத்தான்குடியில் சட்டவிரோதமாக விடுவிக்கப்பட்ட பகுதியை தேசிய கொவிட் - 19 செயலணியின் முடிவு வரும்வரை, உடன் மூடுமாறு மாவட்ட செயலணியில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காத்தான்குடியில் சட்டவிரோதமாக விடுவிக்கப்பட்ட 7 கிராம சேவகர் பிரிவையும் தேசிய கொவிட் 19 செயலணியில் இருந்து அறிவித்தல் வரும்வரை உடனடியாக மூடுவதாக நேற்று (ஞாயிற்றுக்கிழமை) மட்டக்களப்பு மாவட்ட கொரோனா தடுப்பு செயலணியால் தீர்மானிக்கப்பட்டு, முடிவு எடுக்கப்பட்டுளளது.

கொரோனா தொற்று அதிகரித்ததன் காரணமாக காத்தான்குடி பிரதேச செயலகப் பிரிவு, கடந்த டிசெம்பர் 31 ஆம் திகதி தனிமைப்படுத்தப்பட்டு முடக்கப்பட்டது. பின்னர் 7 கிராம சேவகர் பிரிவு விடுவிக்கப்பட்டது. ஆனால், 10 கிராம சேவகர் பிரிவில் தனிமைப்படுத்தல் தொடர்ந்தும் அமுலில் இருந்தது.

இந்நிலையில், பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் காத்தான்குடி நகரசபை தவிசாளர் தன்னிச்சையாக தீர்மானித்து, கொவிட் சட்டத்துக்கு முரணாக 7 கிராமசேவகர் பிரிவை நேற்று விடுவிப்பதாக அறிவித்திருந்தார்.

இதனையடுத்து ஏற்பட்ட முறைப்பாடுகளின் பிரகாரம் அந்தப் பகுதிக்கு மாவட்ட அரச அதிபர், மாவட்ட உதவி பொலிஸ்மா அதிபர், இராணுவத்தினர், சுகாதார அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்ட பின்னர் மாவட்ட கொரோனாத் தடுப்பு செயலணி அவசரமாக மாவட்ட செயலகத்தில் கூட்டப்பட்டு ஆராயப்பட்டது.

அதில் எந்தப் பகுதியை தனிமைப்படுத்துவது அல்லது விடுவிப்பது தொடர்பாக மாவட்ட செயலணிக்குழு கொவிட் 19 தேசிய செயலணிக்கு பரிந்துரைக்க முடியும். அதற்கான முடிவுகள் பிரகாரம் நாங்கள் அதனை அமுல்படுத்த முடியும். இருந்தபோதும் தன்னிச்சையாக எவரும் முடிவு எடுக்கமுடியாது.

எனவே, தன்னிச்சையாக விடுவிக்கப்பட்ட 7 கிராம சேவகர் பிரிவும் கொவிட் 19 தேசிய செயலணியில் இருந்து அறிவித்தல் வரும் வரை உடனடியாக முடக்கப்படும் என மாவட்ட செயலணியில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே, கொவிட் - 19 சட்ட விதிமுறைகளுக்கு எதிராக விடுவிக்கப்பட்ட காத்தான்குடி 7 கிராம சேவகர் பிரிவும் உடனடியாக முடக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!

நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த ஒன்றரைமாதமஞ்சள்கன்றுகள்யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.

விலை - 150/=







கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.02.2021இல் வெளியிடப்பெற்றது.